**தலைப்பு 248 – மதுவரித் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 248 – மதுவரித் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மதுவரித் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூலை 01 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மதுவரித் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) வருமான பெறுவனவுகள்**

திணைக்களத்திற்குரிய வருமான பெறுவனவுகளை கணக்கீடு செய்யும்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | பிரதான அலுவலகத்தின் காசு பிரிவிற்கு கிடைக்கின்ற வருமானம் சரியாக வருமானதளத்தின் கீழ் மாதாந்த கணக்கு பொழிப்புக்களில் வருமான குறியீட்டு பிரகாரம் வகைப்படுத்தப்படாமல் 08 வருமானக் குறியீட்டுக்குரிய கூட்டுமொத்தமான ரூபா 2,023,290,169 கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வங்கிக் கணக்குகளுக்கு கிடைக்கின்ற சகல நாளாந்த கொள்வனவுகள் EXCEL மூலம் பதியப்பட்டு ஒவ்வொரு வருமான தலைப்பிற்கும் மாதாந்தம் கிடைத்த மொத்த காசு CIGAS நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கி மாதாந்தக் கணக்கு பொழிப்புக்களில் காண்பிக்கப்பட்டுள்ளது. | கிடைக்கின்ற வருமானங்களை சரியாக வருமான தலைப்பின் கீழ் நாளந்தம் மற்றும் மாதாந்த வகைப்படுத்தல் பொழிப்பு தயாரித்தல் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2023 ஆம் ஆண்டின் ஏப்ரல், மே மற்றும் யூன் என்ற 03 மாதங்களுக்குரிய வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக செலவு வைக்கப்பட்ட இனங்காணப்படாத 11 வைப்புக்களின் கூட்டுத் தொகையான ரூபா 6,124,850 யாரிடமிருந்து கிடைத்தது என குறித்துரைத்த ரீதியில் இனங்காணாமல் மற்றும் உரிய வருமான தலைப்பிற்கு உரியதா என இனங்காணாமல் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வங்கிக்கு பணம் செலவு வைக்கப்படுகின்ற தரப்பினரால் தமது அடையாளத்தை வெளிப்படுத்தி சமர்ப்பித்தல் மேற்கொள்ளப்படாதிருக்குமாயின் மற்றும் அந்த வைப்பாளர்களை இனங்காண்பதற்கு வேறொரு நடைமுறையொன்று காணப்படாதிருந்தமையால் அந்த வைப்புக்களை இனங்காணாத வைப்பாக கருதி அரசாங்கத்தின் வருமானத் தலைப்பில் செலவு வைத்தல் மேற்கொள்ளப்படுகின்றது. | கால ரீதியில் வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்கப்படுகின்ற இனங்காணாத வைப்புக்களை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 2023 இன் வரவு செலவுத்திட்ட முன்பொழிவின் பிரகாரம் சேகரிக்கப்படுகின்ற நாளாந்த வருமானம் ஒன்றிணைந்த நிதியத்திற்கு அனுப்பி வைக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது உள்நாட்டு மதுபானத்திற்காக டிஜிட்டல் அடையாளம் மற்றும் அச்சிடப்பட்ட ஸ்டிக்கர் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட மதுபானங்களுக்காக ரூபா 1,001,284,916 ஸ்டிக்கர் வருமானத்தை உள்ளடக்கி வங்கிக்கணக்கிற்கு மீளாய்வாண்டில் செலவு வைக்கப்பட்ட ரூபா 1,864,060,436 பொது திறைசேறிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ITMIS முறைமையின் கீழ் சகல பணமும் 2023 ஆகஸ்ட் மாதத்தின் 01 ஆம் திகதியிலிருந்து பொதுத் திறைசேறிக்கு அனுப்பி | பிரதேச அலுவலகங்களில் நாளாந்த செலவினத்திற்காக சிறிய பணம் தொடர்ச்சியாக உபகட்டுநிதியாக வழங்கப்பட்டுள்ளது. அந்த செலவினங்களை தீர்ப்பதற்காக காணப்படுகின்ற முறைமையில் உடனடியாக மாற்றங்களை செய்தல். உத்தியோகத்தர்களுக்கு வசதியீனமாக இருந்தமையால் அந்த முறைமை மாற்றுதல் படிப்படியாக மேற்கொள்ள வேண்டியிருந்தது. அதன்பிரகாரம் 2024 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதம் முதல் சரியான பிரகாரம் திறைசேறிக்கு நாளாந்த வருமானம் அனுப்பப்படுகின்றது. | 2023 இன் வரவு செலவுத்திட்ட பிரேரணை மற்றும் திறைசேறி ஆலோசனை பிரகாரம் சேகரிக்கப்படுகின்ற நாளாந்த வருமானம் ஒன்றிணைந்த நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்டல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வைக்குமாறு எழுத்து மூலம் ஆலோசனை கிடைத்திருக்கும்போது அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (iv) | 2019 டிசம்பர் 27 ஆம் திகதியில் இலக்கம் 2155/19 என்ற அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட இலக்கம் 10/2019 என்ற மதுவரி அறிவித்தலின் தன்மையை மாற்றாதிருக்குமாறும் மேற்கொள்ளப்பட்ட திரவம் மற்றும் விற்பனைக்காக கருதப்பட்ட போத்தல்களில் இடப்பட்ட மதுபானம் ஏற்றுமதி தொடர்பாக கணக்கு பிரிவில் இருந்து சமர்ப்பிக்கப்பட்ட வரி மேவுகை தொடர்பான தகவல்கள் 2023 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரை மதுவரித் திணைக்களத்தால் 04 உற்பத்தி நிர்வனங்களுக்குரிய 32 சந்தர்ப்பங்களின் போது ரூபா 7,301,770,528 மதுவரி தொகையை மீளளித்தல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| * | அரச கணக்குகள் திணைக்களம் மற்றும் திறைசேறி செயற்பாடுகள் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மதுபான உற்பத்தியாளர்களால் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய மொத்த வரித் தொகை வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டு அவர்களுக்கு வழங்கப்படுகின்ற வரிச் சலுகை வருமானத்தில் | 2023 ஆம் ஆண்டின் மதுவரி சலுகை தொகையான ரூபா 7,301,370,528 தொகை ஏசீஏ - i (iii) படிவத்தை அடியில் குறிப்பின் மூலம் காண்பிக்கப்பட்டுள்ளது. | மதுபான ஏற்றுமதிக்குரிய வரி மீள்செலுத்துகை திறைசேரி திணைக்களம் மற்றும் அரச கணக்குகள் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரமும், நிதிப்பிரமாணம் 118 இன் பிரகாரமும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீள செலுத்துதலாக கணக்கீடு செய்ய வேண்டி போதிலும் நிதிப்பிரமாணம் 118 இன் பிரகாரம் வருமானங்களை மீள செலுத்தும் அதிகாரம் மதுவரி ஆணையாளருக்கு வழங்கும் வகையில் சட்ட ரீதியான ஏற்பாடை பெற்றுக் கொள்ளல் பொருத்தமானது என பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும் இதுவரை அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | |
| * | மதுபான உற்பத்தி வரிகளில் இருந்து உரிய மீளழிப்புக்கள் குறைக்கப்பட்ட பின்னர் தேறிய மதுவரி வருமானம் கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக மதுவரி வருமானமான ரூபா 7,301,770,528 குறைத்து வெளிப்படுத்தப்பட்டது. மேலும் மதுவரி திணைக்களத்திற்குரிய திறைசேரியின் கணக்குகளிலும் மதுவரி ஏற்றுமதி மதுபானம் ஏற்றுமதியின் அடிப்படையில் மதுவரி வருமானம் மீளளிப்பு தொடர்பான தகவல்களை அறிக்கையிடல் மற்றும் வெளிப்படுத்துதல் மேற்கொள்ளப்படா திருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஏசீஏ - i (iii) படிவத்தின் அடிக்குறிப்பு மூலம் காண்பிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| * | மீளாய்வாண்டின் மதுபான ஏற்றுமதிக்காக மதுவரி மீளெழிப்பு தொடர்பாக கோவைகள் தெரிவுப் பரிசோதனையின் போது 03 அனுமதிப்பத்திரங்களில் குறிப்பிடப்பட்ட நாடுகளுக்குப் பதிலாக ஏனைய நாடுகளுக்கு | உரிய ஏற்றுமதி அனுமதி பத்திரங்களுக்கு வெளிநாட்டு கொள்வனவாளர்களின் கோரிக்கையின்படி உரிய மதுபான இருப்பு கப்பலில் ஏற்றப்பட்டது. | ஏற்றுமதி மீளளிப்பு தொடர்பாக முறையான உலக கட்டுப்பாட்டு முறைமை ஒன்று ஏற்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்றுமதி செய்யப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள், 02 அனுமதிப்பத்திரங்களில் குறிப்பிடப்பட்ட குறித்துரைத்த திகதியின் பின்னர் நாளொன்றில் ஏற்றுமதி செய்தல் மற்றும் குறித்துரைத்த காலம் காண்பிக்கப்படாத சந்தர்ப்பம், 20 அனுமதிப்பத்திரங்கள் அலுவலக பிரதியில் பொறுப்பு வாய்நத உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தாதிருந்த சந்தர்ப்பம் மற்றும் சுங்க தரவு முறைமையில் ஏற்றுமதி ஆவணங்கள் சரியான தன்மையை உறுதிப்படுத்தாத சந்தர்ப்பங்கள் என்பன அவதானிக்கப்பட்டன. | | |
| * | ஏற்றுமதி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட மதுபான இருப்புக்கள் கொள்கலனில் இடுவதை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்களில் இணைந்த பரிசோதனை ஒன்று மதுவரி மற்றும் சுங்க உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தமை குறிப்பிடப்பட்ட போதிலும் அந்த ஆவணங்களில் மதுபான இருப்பு சரியான முறையில் கொள்கலன் இடப்பட்டமைக்கு மதுவரி உத்தியோகத்தர்களால் மாத்திரம் உறுதிப்படுத்தப் பட்டிருந்ததுடன் சுங்க உத்தியோகத்தரால் கையொப்பமிட்டு உறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்படாதிருந்தமை அதானிக்கப்பட்டது. | ஏனைய நிறுவனங்களின் மூலம் விநியோகிக்கப்பட்ட ஆவணங்களில் கையொப்பமிடுவதற்கு இலங்கை சுங்க கடப்பாடுடையதாக இருந்தமை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | ஏற்றுமதிகளுக்குரிய மதுவரி திணைக்களம் மற்றும் சுங்க திணைக்களத்தின் ஒன்றிணைந்த மேற்பார்வை மற்றும் மேற்பார்வை மேற்கொள்ளப்பட்டமைக்கு ஆவண ரீதியில் சான்றுகள் மூலம் உறுதிப்படுத்தும் திட்ட முறைமை ஒன்று காணப்படல் வேண்டும். |

2. நிதி மீளாய்வு

2.1 வருமான முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 இன் வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டின் பிரகாரம் ஒட்டுமொத்த மதுவரி மற்றும் புகையிலை வரி வருமானம் மதிப்பீடு ரூபா 217,035,000,000 முதல் ரூபா 182,000,000,000 வரி ரூபா 35,035,000,000 அதாவது 16 சதவீதத்தால் குறைத்து திருத்தப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டில் மதுபானங்களுக்காக ரூபா 181 பில்லியன் மற்றும் புகையிலை வரிக்காக 1 பில்லியன் ஆன திருத்தங்களும் செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | சரியான மேற்பார்வை மற்றும் கண்காணிப்புக்களை அமுல்படுத்தி எதிர்பார்க்கப்பட்ட வருமான மதிப்பீட்டு இலக்கை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஆண்டின் ஒட்டுமொத்த திருத்தப்பட்ட மதுவரி மற்றும் புகையிலை வரி வருமான மதிப்பீடான ரூபா 182,000,000,000 உடன் ஒப்பிடும் போது ரூபா 171,273,655,832 ஆன வரி வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது 94 சதவீதமாக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் ஆரம்ப பாதீட்டு மதிப்பீடொன்று ஒப்பிடும் போது 78 சதவீதம் ஆகும். | அவதானிப்புக்கள் சரியாக இருந்த போதும் 2023 ஆம் ஆண்டில் மதுவரி வருமானம் ரூபா 171,273,655,832 ஆக இருந்ததுடன் மதுவரியின் அடிப்படையில் வரி மீளளிப்பு 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 7,301,770,528 ஆகும். அதன் பிரகாரம் ஒட்டுமொத்த மதுவரி வருமானம் ரூபா 178,575,426,360 ஆகும். அதன் பிரகாரம் வருமானம் சேகரித்தல் 98.1 சதவீதம் ஆகும். | -மேற்படி- |
| (இ) | மதுவரி திணைக்கள தகவல்களின் பிரகாரம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது 10 வகையான மதுபானங்களை 07 வகையான மதுபானங்கள் உற்பத்தி தேறிய மதுசாரம் லீற்றர் 8,396,933 இனால் அதாவது 19 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தமை | மதுபான வரியின் காரணமாக விலை உயர்வடைந்தமை மற்றும் பணவீக்கத்தின் காரணமாக கொள்வனவு சக்தி குறைவடைந்தமையால் மதுபானத்திற்கான கேள்வி குறைவடைந்ததன் அடிப்படையாகக் கொண்டு உற்பத்திக் குறைவும் அவதானிக்கப்பட்டது. | மதுபான உற்பத்தி குறைவடைந்ததன் மூலம் போலியான மதுபானங்கள் சந்தைக்கு வருவதை தடுத்துக் கொள்வதற்கு உரிய சுற்றிவலைப்புக்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

அவதானிக்கப்பட்டது. மேலும் மதுபான உற்பத்தி குறைவடைந்திருந்த போதிலும் மதுவரி வருமானம் உயர்வடைந்து சென்றமைக்கான 02 சந்தர்ப்பங்களின் போது மதுவரி அறிவித்தல் 02 இன் மூலம் மதுவரி விகிதம் 20 சதவீச்சினால் அதிகரித்தமை தாக்கமளித்திருந்தது.

(ஈ) **நிலுவை மதுவரி வருமானம்**

2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் 13 மதுபான உற்பத்தி நிறுவனங்களில் இருந்து ரூபா 7,159,178,778 தொகையும் கள் உற்பத்தி செய்யும் 13 நிறுவனங்களில் இருந்து ரூபா 6,218,940 தொகையும், 03 மதுபான உற்பத்திப் கூடங்களிலிருந்து ரூபா 31,483,610 தொகையும் மதுவரி மற்றும் மதுபான உற்பத்தி செய்யும் 04 நிறுவனங்களுக்காக நிலுவை வரி ரூபா 68,392,684 தொகையும் உள்ளடக்கி மொத்த நிலுவை மதுவரி வருமானம் மற்றும் அதற்குரிய நிலுவை தாமதக் கட்டணம் என்பவற்றின் கூட்டுமொத்தம் ரூபா 7,265,274,012 ஆகும். நிலுவை வருமானம் தொடர்பாக நிதிப்பிரமானம் 128 (1) (எ), 128 (2) (உ) ஏற்பாடுகள் மற்றும் அந்த

2024 ஆம் அண்டின் போது ஒரு மதுபான கூடத்திலிருந்து ரூபா 8,676,985 தொகையும் கள் தொடர்பான போத்தல்களில் 03 கள் உற்பத்திக் கூடங்களில் இருந்து ரூபா 4,514,250 தொகையும் மற்றும் 09 பனங்கள் உற்பத்தி கூடங்களிலிருந்து நிலுவை பணமும் அறவிடப்பட்டுள்ளது. மேலும் தற்போது நிலுவை வரிகளுக்குரிய ரூபா 706,302,955 தொகை 2024 ஆம் ஆண்டில் அறவிடப்பட்டுள்ளது.

மதுவரி கட்டளை சட்டத்தின் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | அனுமதிப்பத்திரங்களுக்குரிய 1912 இன் 08 ஆம் இலக்க மதுவரி கட்டளைச் சட்டம் அதற்குரிய திருத்தங்கள் மற்றும் மதுவரி அறிவித்தல்களில் ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது. | | |
| (i) | மீளாய்வாண்டிலும் கடந்த 04 ஆண்டுகளிலும் நிலுவை வருமான அறிக்கையுடன் ஒப்பிடும் போது அறவிட வேண்டிய மொத்த நிலுவை மதுவரி வருமானம் முறையாக அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | மதுவரி தொகை குறித்துரைத்த திகதியில் செலுத்தாதிருக்குமாயின் வருடாந்தம் 36 சதவீதம் தாமதக் கட்டணம் சேர்க்கப்படுகின்றது. அவ்வாறு வருடாந்த தாமதக் கட்டணம் அதிகரித்ததன் காரணமாக 2019 ஆம் ஆண்டு முதல் நிலுவை வருமானத்தின் அதிகரிப்பு ஒன்று காணப்பிக்கப்படுகின்றமை தயவுடன் அறியத்தருகின்றோம். | -மேற்படி- |
| (ii) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் 04 நிறுவனங்களிலிருந்து அறவிடவேண்டிய நிலுவை மதுபான வரி மதுவரி வருமானம் ரூபா 409,254,141 மற்றும் அதற்கான தாமதக் கட்டணம் ரூபா 2,127,769,607 கூட்டு மொத்தமாக ரூபா 2,537,023,748 ஆகும். | இந்த நிலுவை வரித் தொகையில் ரூபா 2,537,023,747 தொகை 15 வருடங்களைக் கடந்த நிலுவை வரித் தொகையாகும். அதில் 03 நிறுவனங்கள் தற்போது செயற்படுவதில்லை. அதில் ஒரு நிறுவனத்திலிருந்து அறவிட வேண்டிய நிலுவை வரித் தொகை தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கொன்று விசாரணையில் உள்ளது. ஏனைய இரண்டு நிறுவனங்களிலிருந்து அறவிட வேண்டிய நிலுவை மதுவரி மற்றும் மிகைக் கட்டணம் செலுத்துவதற்காக | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | | 2011.11.30 ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்தின் வழிகாட்டலின் கீழ் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.<br><br>எனினும் 2014.04.25 ஆம் திகதி முதல் இந்த கம்பனி உடன்படிக்கை பிரகாரம் நிலுவை மதுவரி மற்றும் மிகைக் கட்டணம் செலுத்துதலை புறக்கணித்திருந்தது. அதன் காரணமாக இந்தக் கம்பனி இரண்டிற்கும் அனுமதிப் பத்திரம் வழங்குதல் நிறுத்தப்பட்டுள்ளது. மேலும் ஏனைய நிறுவனமொன்றிலிருந்து அறவிட வேண்டிய நிலுவை வரி மற்றும் மிகைக் கட்டணம் தொடர்பாக வழக்கொன்று நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ளது. | |
| (iii) | மேலும் 2019 ஆம் ஆண்டு முதல் மேலும் ஒரு நிறுவனத்திலிருந்து அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட நிலுவை மதுவரி வருமானம் ரூபா 1,292,877,138 மற்றும் அதற்கான தாமதக் கட்டணம் ரூபா 1,921,514,810 கூட்டுமொத்தமாக ரூபா 3,214,391,948 ஆகும். | இந்த நிறுவனம் நிலுவை வரி மற்றும் மிகைக் கட்டணம் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கொன்றை தொடுத்துள்ளது. | சட்ட ரீதியான ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | மேற்கூறப்பட்ட 2.1 (ஈ) ii இல் குறிப்பிடப்பட்ட நிறுவனம் மற்றும் iii இல் குறிப்பிடப்பட்ட நிறுவனம் மற்றும் 06 நிறுவனங்களை உள்ளடக்கி மதுபான உற்பத்தி செய்யும் 08 நிறுவனங்களிலிருந்து | தற்போது நிலுவை மதுவரி வருமானம் 01 நிறுவனங்களில் நிலுவை வரித் தொகை மற்றும் மிகைக் கட்டணம் அறவிடுவதற்காக 2024.02.29 ஆம் திகதி மற்றும் 02 நிறுவனங்களுக்கு 2024.02.28 ஆம் திகதி இணக்கப்பாட்டு | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | மதுவரி மற்றும் தாமதக் கட்டணங்களின் கூட்டுமொத்தம் ரூபா 1,404,820,502 நிலுவை வருமானமொன்று மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்டது. | உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. தற்போது வரையில் அந்த வரித் தொகையில் மிகைக்கட்டணங்களில் ரூபா 306,093,064 அறவிடப்பட்டுள்ளது. மேலும் 05 நிறுவனங்களால் நிலுவை வரி மற்றும் மிகைக் கட்டணம் ரூபா 400,209,891 தொகை 2024 ஆம் ஆண்டின் போது செலுத்தி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | |
| (உ) | **நிலுவை புகையிலை வரி** | | |
| (i) | 2009 இன் 01 ஆம் இலக்க புகையிலை சராசரி கட்டளையின் பிரகாரம் பதிவு சான்றிதழ் பெறாதிருந்த புகையிலை இறக்குமதி செய்யும் நடவடிக்கைகளின் காரணமாக 02 நிறுவனங்களிலிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 6,688,478 நிலுவை வரமான வரி வருமானம் ஒன்று காணப்பட்டது. | ஒரு நிறுவனத்திலிருந்து 2024 ஆம் ஆண்டில் ரூபா 800,000 செலுத்தப்பட்டுள்ளதுடன் ஏனைய நிறுவனத்தின் உரிமையாளர் வெளிநாடு சென்றமையினால் இந்த வரித் தொகையை அறவிடுவதற்காக சட்டப்பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் மற்றும் உடன்படிக்கையை மீறியமை தொடர்பாக சட்ட ரீதியான ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | புகையிலை மற்றும் அது சார்ந்த கைத்தொழில்களை ஒழுங்குபடுத்துதல், வரி அறவிடல் மேற்பார்வை மற்றும் நிர்வகிப்பதற்கான 2004 இன் 09 ஆம் இலக்க புகையிலை வரி (திருத்தப்பட்ட) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1999 இன் 08 ஆம் இலக்க புகையிலைவரி சட்டத்தின் 2 ஆம் பிரிவு மற்றும் 21 ஆம் பிரிவின் கீழ் 2022 டிசம்பர் 31 ஆம் திகதிய பீடிக்கான புகையிலை வரி விதிப்பதற்குரிய புகையிலை வரி சட்டத்தின் கீழான அறிவித்தல் மற்றும் 2023 | பீடி உற்பத்திக்காக எந்தவொரு வரித் தொகையும் அறவிடப்படுவதில்லை எனக் குறிப்பிட்ட 387 உற்பத்தியாளர்களில் 44 சுருட்டு உற்பத்தியாளர்கள் மற்றும் 27 புகையிலை இறக்குமதி செய்பவர்களுக்காக வரி உரித்தாவது இல்லை. பதிவினை புதுப்பித்துள்ள 212 பேர்களில் வருமானம் கிடைக்கப் பெறவில்லை. மிகுதி நிறுவனங்களுக்காக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | புகையிலை வரி சட்டத்தின் கீழான அறிவித்தலின் செயற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சனவரி 18 ஆம் திகதிய இலக்கம் 1/2023 சுற்றறிக்கை மூலம் சட்ட ரீதியான ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளது. பீடி கைத்தொழிலில் ஈடுபடுகின்ற 316 நிறுவனங்களில் 212 நிறுவனங்கள் பதிவினை புதிப்பிக்காதிருந்ததுடன் அது தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. பதிவு செய்த 104 நிறுவனங்களில் மீளாய்வாண்டில் எந்தவொரு வரித்தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. வரி அறவிடும்போது சிறிய அளவிலான, நடுத்தர அளவிலான மற்றும் பாரிய அளவிலானதாக உற்பத்தியாளர்கள் வகைப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஊ) | இழப்புக்களுக்காக நிலுவை மதுவரி | | |
| | ஒவ்வொரு உற்பத்திக் கூடமும் அல்லது உற்பத்திக் கூடங்களுக்காக அறவிட வேண்டிய உற்பத்தி இழப்புக்கள் தொடர்பாக மாதாந்தம் அல்லது மும்மாத நிதித் தகவல்கள் தொடர்ச்சியாக பிரதேச அலுவலகங்களின் வருமானப் பிரிவு மற்றும் கணக்குப் பிரிவிற்கு அறிக்கையிடாமை மற்றும் நீண்ட காலமாக நிலுவை வருமானம் அறவிடப்படாமை, கோவைகளின் தகவல்களுக்கு மேலதிகமாக அது தொடர்பாக ஒவ்வொரு | அறிக்கையிடப்பட்டுள்ள இழப்புக்களுக்குரிய வரித்தொகை 2023.12.31 இல் உள்ளவாறு நிலுவை வரி அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. 2016.12.09 ஆம் திகதியில் இலக்கம் 991 மதுவரி அறிவித்தலின் பிரகாரம் இழப்பீட்டின் அடிப்படையில் வரி அறவிடல், உரிய பிரிவில் மதுவரி பொறுப்பாளர், மதுவரி அதிகாரிகள் மற்றும் உதவி மதுவரி ஆணையாளர் பொறுப்புக்களாக இருக்கின்றனர். | இழப்புக்கள் தொடர்பாக நிலுவை வருமானம் மாதாந்தம் மற்றும் மும்மாத ரீதியில் தொடர்ச்சியாக பிரதேச அலுவலகங்களிலிருந்து அறிக்கையிடல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிறுவனங்களுக்கும் உரிய முழுமையான தகவல்கள், வருமான பதிவேடு மற்றும் நிலுவை வருமானப் பதிவேடுகள் பேணிச் செல்லப்படாமை. நிதிப் பெறுமானம் 128(2)(ஈ) இன் பிரகாரம் நிலுவை பெறுமானம் அறிக்கையிட வேண்டியிருந்த சகல நிறுவனங்களும் இழப்புக்கள் தொடர்பாக நிலுவை வருமானத் தகவல் அறிக்கையிடாமை போன்ற குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. | | |

## 2.2 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **மூலதன செலவினம்** | | |
| 07 மூலதன செலவின விடயங்களுக்காக ரூபா 438,000,000 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதில் கூட்டு மொத்தமாக ரூபா 166,569,268 மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அது செலவின விடயங்களின் சேமிப்பில் அந்த செலவின விடயங்களின் சேமிப்பு ரூபா 271,430,732 ஆகும். | RASED செயற்திட்டத்திற்காக பெறுகை நடைமுறைகளின் மூலம் பொருத்தமான சேவைப் பங்களிப்பாளரை தெரிவு செய்யும் போது ஏற்பட்ட பிரச்சினையான நிலைமையின் அடிப்படையில் திட்டமிடப்பட்ட சில பெறுகை நடவடிக்கைகள் இரத்துச் செய்யப்பட வேண்டியிருந்தமையும் சிலப் பெறுகை நடவடிக்கைகள் தாமதமடைந்ததன் அடிப்படையில் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | மதுவரித் திணைக்களத்திற்கான வருமான நிர்வாக முறைமை ஸ்தாபித்தல் போன்ற அத்திவயவசிய செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| அவதானிப்புக்கள் | | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி ரூபா | இணங்காமைகள் | | |
| (i) | 1988 இன் 74 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1975 இன் 01 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளியிடும் சட்டம் மற்றும் இலக்கம் 04/1994 மற்றும் 1994 பெப்ரவரி 18 ஆம் திகதிய நீதி அமைச்சின் சுற்றறிக்கை | | வருடாந்தம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக் கூற்று மதுவரித் திணைக்களத்தின் பதவி நிலை உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். 2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறு 120 உத்தியோகத்தர்களுக்கு சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய அறிக்கை சமர்பிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2023.12.31 இல் உள்ளவாறு 120 உத்தியோகத்தர்களுக்கு சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. | உரிய சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 2019 டிசம்பர் 27 ஆம் திகதிய இலக்கம் 10/2019 என்ற மதுவரி அறிவித்தல். | 7,301,770,528 | மதுவரி செலுத்துதல் அடிப்படையில் அல்லது வரியின்றிய அடிப்படை மதுபானம் ஏற்றுமதி செய்வதற்காக மதுவரி ஆணையாளர் நாயகத்திற்கு ஏற்றுக் கொள்ளக் கூடிய பிணை ஒன்று அல்லது வங்கிப் | பிணை மேவுகை தொடர்பாக சுற்றறிக்கை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மதுவரி அறிவித்தலின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | பிணை முறையொன்று வைக்கப்பட வேண்டியிருந்தமை குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் மீளாய்வாண்டில் கடின உற்பத்தி மதுபானஉற்பத்தி சரிவு மதுபான உற்பத்தி 03 நிறுவனங்களால் 06 சந்தர்ப்பங்களின் போது தானிய மதுபான உற்பத்தி நிறுவனத்தால் 26 சந்தர்ப்பங்களின் போதும் ஏற்றுமதி செய்யப்பட்ட மதுபான லீற்றர் 16,364,975 இற்காக ரூபா 7,301,770,528 மதுவரி மீளளித்தலுக்காக உரிய பிரகாரம் பிணை மீளளிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (iii) | 2008 ஏப்ரல் 10 ஆம் திகதிய இலக்கம் 1544/17 என்ற அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 902 மதுவரி அறிவித்தல், 2015 டிசம்பர் 15 ஆம் திகதிய இலக்கம் 1945/17 என்ற அதிவிசேட | | 2023 ஆம் ஆண்டிற்காக புதுப்பிக்கப்பட்ட அனுமதிப்பத்திரம் தொடர்பான தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது உள்நாட்டுக் குடிபானங்களுக்கு 04 அனுமதிப் பத்திரங்கள் வெளிநாட்டு குடிபானங்கள் 07 மற்றும் | 2023 ஆம் ஆண்டு இறுதியில் ஏற்பட்ட தொழில்நுட்பப் பிரச்சினையின் அடிப்படையில் வரி விடுதலை சான்றுதல் மற்றும் ஏற்பட்ட நெருக்கடியின் அடிப்படை சுற்றுலா சபை அங்கீகாரம் தாமதமடைந்ததன் படி மேலதிக மதுவரி ஆணையாளர் நாயகத்தின் 2023.12.13 ஆம் திகதிய இலக்கம் | -மேற்படி- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 983 மதுவரி அறிவித்தல், 2017 டிசம்பர் 11 ஆம் திகதிய இலக்கம் 2049/4 என்ற வர்த்தமானி அறிவித்தல், இலக்கம் 1004 மதுவரி அறிவித்தல், 2018 சனவரி 18 ஆம் திகதிய இலக்கம் 2054/41 என்ற அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல், இலக்கம் 3/2018 மதுவரி அறிவித்தல் மற்றும் மதுவரி ஆணையாளர் நாயகத்தின் 2022 ஒக்டோபர் 04 ஆம் திகதிய இலக்கம் ர.சீ/எல் பீ/04/வருமான அனுமதிப்பத்திரம் பொது (vi) சுற்றறிக்கை | | வெளிநாட்டுக் குடிபானங்கள் 22 மற்றும் குடிபான அனுமதிப் பத்திரம் புதுப்பிக்கும்போது பொலிஸ் அறிக்கை சமர்ப்பிக்காமை, சுற்றுலா சபையின் அங்கீகாரம் மற்றும் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் விநியோகிக்கப்படுகின்ற வரி செலுத்தப்பட்டமைக்கான சான்றுகள் போன்றவை கோவையில் உள்ளடக்கப்படாதிருந்தமையால் அனுமதிப் பத்திரக் கட்டணங்களுக்குரிய அந்த தேவை நிறைவேற்றப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ED/04/Miscellaneous கடிதத்தின் பிரகாரம் வருமான வரி விடுதலை மற்றும் சுற்றுலா சபையின் அங்கீகாரத்தின் பின்னர் பெற்றுக் கொள்வதன் கீழ் மதுவரி அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (iv) | 2016 டிசம்பர் 09 ஆம் திகதிய இலக்கம் 991 என்ற மதுவரி அறிவித்தலின் மூலம் திருத்தப்பட்ட 2002 ஏப்ரல் 18 ஆம் திகதிய 844 ஆம் | 68,392,384 | மதுவரி அறிவித்தலின் பிரகாரம் வழங்கப்படுகின்ற சலுகைகளை மிஞ்சியிருந்த சந்தர்ப்பத்தில் அமுல்படுத்துகின்ற வரி விகிதத்தின் பிரகாரம் | ஒரு நிறுவனத்தில் இருந்து அறவிட வேண்டிய உற்பத்திக்கான நிலுவை வரிப்பணம் அறவிடுதல் தொடர்பாக குழுவொன்றின் மூலம் பரிசோதனை மேற்கொள்ளப்படுவதுடன் மேலும் 04 | -மேற்படி- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இலக்க மதுவரி அறிவித்தல் | | அரசாங்கத்திற்கு வரி செலுத்த வேண்டியிருந்தமை குறிப்பிடப்பட்டுள்ளதுடன் மீளாய்வாண்டில் 04 மதுபான உற்பத்திக் கூடங்களிலிருந்து ரூபா 68,392,384 இழப்பீட்டிற்காக வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிறுவனங்களுக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (v) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை XXIV ஆம் அத்தியாயம், 2004 ஒக்தோபர் 11 ஆம் திகதிய இலக்கம் 118 என்ற பாதீட்டு சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் மற்றும் 2019 யூன் 27 ஆம் திகதிய இலக்கம் 05/2019 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் 03(உ) பந்தி | 1,214,837 | (i) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு மரணமடைந்த 10 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய நிலுவைக் கடன் மீதி ரூபா 1,214,537 ஆகும். | தற்போது 05 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 477,610 மரணப் பணிக்கொடையில் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| 1,845,808 | (ii) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு சேவையை விட்டுச் சென்ற 14 உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிட வேண்டிய கூட்டுமொத்தம் ரூபா 1,845,808 ஆகும். | இதுவரையில் 13 உத்தியோகத்தர்களிட மிருந்து ரூபா 1,220,561 அறவிடப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| 1,575,426 | (iii) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு வேலை நீக்கத்துக்கு உட்பட்ட 14 உத்தியோகத்தரி டமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 1,575,426 ஆகும். | இதுவரையில் அறவிடப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூபா 1,468,342 ஆகும். | -மேற்படி- |

**2.4 வங்கிக் கணக்கு செயற்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 395(இ) இன் பிரகாரம் வங்கிக் கணக்குகளுக்குரிய மாதாந்த வங்கி இணக்கக் கூற்று அடுத்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் தயாரித்து கணக்காய்வாளர் அதிபதிக்கு பரீட்சிப்பதற்காக தயார் செய்யப்பட வேண்டியிருந்தமை குறிப்பிடப்பட்ட போதிலும் மது வரித் திணைக்களத்தால் 2021 திசெம்பர் 17 ஆம் திகதி இலங்கை வங்கியின் தப்ரபேன் கிளையில் மதுவரி ஆணையாளர் | இந்த வங்கிக் கணக்கு வைப்பாளர்களின் பெயரில் பணம் நேரடியாக சேகரிப்பதற்காக பேணிச்செல்லப்படுகின்ற கணக்காகும். இந்த கணக்கிற்கு நாளாந்தம் சேகரிப்படுகின்ற வருமானம் மதுவரித் திணைக்களத்தின் வேறொரு வங்கிக்கணக்கு ஏனைய வங்கிக்கணக்குகள் 02 இற்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

நாயகத்தின் பெயரில் ஆரம்பிக்கப்பட்ட வங்கி நடைமுறைக் கணக்கிற்காக 2022 ஆம் ஆண்டு முதல் இதுவரை வங்கி இணக்கக்கூற்று தயாரிக்கப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. வங்கி இணக்கக்கூற்று தயாரிக்கப்படாமையினால் வங்கி இணக்கக்கூற்றின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்ற வங்கிக் கட்டணம், மதிப்பிழந்த காசோலை, வங்கியினால் மேற்கொள்ளப்படுகின்ற பிழையான இனங்காணல்கள் மற்றும் அவற்றை சரியாக கணக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்ததா? என்பது தொடர்பான உறுதிப்படுத்தல்கள் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நியமத்தை உடைய மதுபானங்களை சந்தையில் விநியோகித்தல் மற்றும் சட்டவிரோத மதுபாணங்கள் தொடர்பாக வழக்கு நடவடிக்கைகளை துரிதப்படுத்தக் கூடிய வகையில் மதுபாணங்களுக்காக ஆய்வுகூடப் பரிசோதனை மற்றும் மதுபாணங்களின் தரத்தை பரீட்சிப்பதற்காக ஆய்வுகூடம் ஒன்று 2021 ஆம் ஆண்டில் ஸ்தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டு மீளாய்வாண்டின் பாதீட்டின் மூலம் ஆய்வு கூடத்திற்காக இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 100 மில்லியன் | ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் தளபாடங்களைக் கொள்வனவு செய்தல் 2024 மே வரையில் கேள்வி கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மதுபானங்களின் தரத்தை பரிசோதனை செய்வதற்காக ஆய்வுகூடம் ஒன்றை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் செலவிடப்பட்ட செலவினம் ரூபா 1,480,133 அதாவது 1.4 சதவீதம் ஆன மிகவும் குறைந்த சதவீதம் ஆனமையால் ஆய்வுகூடத்தை ஸ்தாபிப்பதற்குரிய மீளாய்வாண்டில் போதியளவான செயல்முன்னேற்றம் அவதானிக்கப்படவில்லை. | | |
| (ஆ) | மதுபானத்திற்காக சரியான நியமத்தை அறிமுகப்படுத்துவதன் கீழ் 11 வகையான மதுபானங்களுக்கான 16 குறிகாட்டிகளின் கீழ் நியமங்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 வரை நியமங்களின் பிரகாரம் உற்பத்திக்கான ஏற்பாடுகள் அமுல்படுத்தக்கூடிய வகையில் நியமம் தொடர்பான வர்த்தமாணி அறிவித்தல் விநியோகிக்கப்பட்டிருக்கவில் லை. மேலும் பெரிய கள்ளுக்கான நியமம் ஸ்தாபிப்பதற்குரிய நடவடிக்கைகள் இதுவரையும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. | நியமங்களுக்காக தயாரிக்கப்பட்ட வரைவு அங்கீகாரத்திற்காக 2024.03.27 ஆம் திகதி அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | நியமங்களின் பிரகாரம் ஏற்பாடுகளை அமுல்படுத்தக்கூடிய வகையில் வர்த்தமாணி அறிவித்தல் விநியோகித்தல் வேண்டும். |
| (இ) | செயற்திறனான வருமான நிர்வாகம், சேவை பங்களிப்பாளர்களுக்காக ஆகக்கூடிய சந்தை சேவையினை உயர்ந்த சேவையினை வழங்குதல், அரசாங்க நிறுவனம் மற்றும் தரவு பரிமாற்றலினை முறைமைப்படுத்துதல் மற்றும் மனிதவள முகாமைத்துவத்திற்கான முறையான வழங்கல்களை அமுல்படுத்துதல் போன்ற நோக்கங்களை | நிதிஅமைச்சின் ஆலோசனையின் பிரகாரம் முறைமையினை அபிவிருத்தி செய்யும் நோக்காகக் கொண்டு திறந்த பெறுகைத் திட்டத்தின் கீழ் பெறுகை நிபுனர் ஒருவரைத் தெரிவு செய்வதற்காக தேவையான பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | உத்தேசிக்கப்பட்ட வருமான நிர்வாக முறைமையில் விரைவாக ஸ்தாபித்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |

நிறைவேற்றுவதற்காக RASED பெரில் உரிய அரசிறமைக்கப்பட வேண்டிய கணனித் தகவல் முறைமை ஒன்றைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் 2020 திசெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் கீழ் மென்பொருள் அபிவிருத்திக்காக 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 100 மில்லியன் ரூபா 94 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் எந்தவொரு செலவினமும் செய்யப்பட்டிருக்கவில்லை. மதுவரித் திணைக்களத்தின் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் நடைமுறைகள், உற்பத்திக்கூட மேற்பார்வை பகிர்ந்தளித்தல் மற்றும் சேவை பங்களிப்புக்களை ஒழுங்குமுறைப்படுத்துதல், குற்றத்தரவுகள் மற்றும் சட்ட முகாமைத்துவம், மதுவரி மற்றும் வரி நிர்வாகம் போன்ற முக்கியமான துறைகளுக்காக உத்தேசிப்பட்ட இந்த கணனி தரவு முறைமை ஸ்தாபித்தல் தாமதத்துடன் காணப்பட்டதன் அடிப்படையில் இலங்கை சுங்கம் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மற்றும் நிதி அமைச்சின் தகவல் முறைமை மற்றும் தொடர்புபடுத்தி ஒன்றினைந்த தகவல் முறைமை ஒன்றாக அமுல்ப்படுத்தி தகவல் பரிமாற்றம் நடவடிக்கைகளை மேலும் தாமதமடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) **ஸ்டிக்கர் முகாமைத்துவ செயற்திட்டம்**

மதுவரி அறிவித்தல் 7/2021 இன் பிரகாரம் நுகர்வோர்களுக்கு சென்றடைய முன்னர் ஒவ்வொரு போத்தல்கள் அல்லது கேன்களிலும் அல்லது கொள்கலன்களிலும் அங்கீகரிக்கப்பட்ட டிஜிட்டல் அடையாளம், முத்திரையிடல் போன்ற ஏற்பாடுகள் தொடர்ச்சியாக அமுல்படுத்தப்படாதிருந்தமை தெரிக்கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| (i) | செறிவு மதுபானம் உற்பத்தி செய்யப்படுகின்ற பிரதான டிஜிட்டல் கம்பனி உற்பத்தி மதுவரித் திணைக்களத்தின் உத்தியோகத்தரின் பரிசோதனைக் குறிப்பு அறிக்கையின் பிரகாரம் இயந்திரம் ஸதாபிக்கப்பட்ட 2022 சனவரி 13 ஆம் திகதி முதல் 2022 திசெம்பர் 31 வரையான காலத்தில் அச்சிடல் இயந்திரம் செயலிழந்து காணப்பட்டதன் அடிப்படையில் மில்லிலீற்றர் 180 மதுபான போத்தல்கள் 3,601,735 மற்றும் 2023 சனவரி முதல் பெப்பரவரி 14 திகதி வரையான காலத்தில் மில்லிலீற்றர் 180 மதுபான போத்தல்கள் 66,335 டிஜிட்டல் அடையாளம் அச்சிடப்படாமை அறிக்கையிடப்பட்டிருந்தது. | டிஜிட்டல் அடையாளம் அச்சிடல் செயற்பாடாக மேற்கொள்ளப்படுகின்றமை ம டிஜிட்டல் அடையாளம் அச்சிடப்படாமை தொடர்பாக பரிசோதனைகளை மேற்கொள்ள தனிப்பட்ட நபர்களை ஈடுபடுத்தி அந்த அச்சிடப்படாத போத்தல்களை தனியாக இனங்கண்டு மீண்டும் அந்த போத்தல்களுக்கு டிஜிட்டல் அடையாளம் இடும் முறை ஒன்று தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ளது. | மதுவரி அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | தானிய மதுபாணம் உற்பத்தி செய்யும் பிரதான கம்பனி ஒன்று 2023 சனவரி 12 முதல் 2023 செப்டெம்பர் 19 வரையான காலத்தில் அதாவது 54 சந்தர்ப்பங்களின் போது அச்சிடல் இயந்திரம் செயலிழந்து காணப்பட்டதன் | தனிப்பட்ட நபர்களை பயன்படுத்தி டிஜிட்டல் அடையாளம் அச்சிடப்படாத போத்தல் / கொள்கலன்களை இனங்கண்டு மீண்டும் அந்த போத்தல்களுக்கு டிஜிட்டல் அடையாளம் | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | காரணமாக டிஜிட்டல் அடையாளம் அச்சிடப்படாத பியர் போத்தல்கள் 1,335,591 அளவு ஒன்று பியர் கொள்கலன் 3,362,568 அளவு ஒன்றும் இனங்காணப்பட்டிருந்தது. அந்த போத்தல் மற்றும் கொள்கலன்களை இனங்கண்டு பிரதேசத்திற்கு விநியோகத்தல் மற்றும் ஏற்றுமதிக்காக மதுவரித் திணைக்களத்தால் எழுத்து மூல அதிகாரம் வழங்கப்பட்டிருந்த சந்தர்பம் அவதானிக்கப்பட்டது. | இடுதல் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் அந்த டிஜிட்டல் அடையாளம் களன்று போகாத முறையில் அச்சிடுவதற்காக ஒப்பந்த நிறுவனம் இணங்கியிருந்தது. மதுவரி உத்தியோகத்தர்களுக்கு டிஜிட்டல் அடையாளத்தை பரிசீலிப்பதற்று UV lights வழங்கப்பட்டுள்ளது. | |
| (iii) | டிஜிட்டல் குறியீட்டை அச்சிடாமையை இனங்காணல் மற்றும் நிராகரிக்கப்பட்ட முறைமைகள் வரை ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | அரைவாசி அச்சிடப்பட்ட மற்றும் அச்சிடப்படாமை தொடர்பாக அறிக்கை மொடியூல் மூலம் வழங்குவதற்கு முடியாமல் உள்ளது. உற்பத்திக் கூட கோர்வைகள் உரிய தவறுகள் பேணிச்செல்லப்படுகின்றது. | டிஜிட்டல் குறியீட்டை அச்சிடப்படாமையை இனங்காணல் மற்றும் நிராகரித்தல் முறைமையை ஸ்தாபித்தல் வேண்டும். |
| (iv) | ஸ்டிக்கர் முகாமைத்துவ முறைமை மதுபாணம் மற்றும் போலியான மதுபாணம் அல்லது கலப்படமான மதுபாணப் போத்தல்களாக பொதுவாக மக்களுக்கு அறிமுகப்படுத்துவதற்காக APP அலகு ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அதில் பிரச்சினைகள் எழுத்திருந்தமை, பாதுகாப்பு அடையாளம் முகாமைத்துவ முறைமை (SFMS) அறிக்கையிடல் மொடியூல் (MIS) அபிவிருத்தி செய்தல் மேற்கொள்ளப்படாமையினால் தேவையான போது | பாதுகாப்பு அடையாள முறையில் குறைபாடுகளை கவனத்தில் கொள்ளாமல் உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டு செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட பணம் டிஜிட்டல் அடையள முறைமையில் காணப்பட்ட வழுக்களினால் அந்த ஆண்டில் கொடுப்பனவுகள் கைவிடப்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் மூலம் | ஸ்டிக்கர் முகாமைத்துவ செயற்திட்டத்தை மீளாய்வு செய்து காணப்படுகின்ற பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்பாடுகள் தொடர்பாக முழுமையான விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியாமல் இருந்தமை. ஒப்பந்தக் கம்பனி மதுவரித் திணைக்களத்தின் அல்லது உற்பத்தியாளர்களின் பௌதீக இருப்பு ஒப்பீடு செய்வதற்காக தேவையான வசதிகள் மென்பொருளின் மூலம் வழங்காமை, மாதாந்தம் அரைப்பகுதி அச்சிடல் மற்றும் அச்சிடப்படாமை தொடர்பான அறிக்கை ஒன்று மொடியூல் மூலம் வழங்க வசதிகள் வழங்காமை, வீழ்சியடைதலுடன் நாளொன்று அச்சிடப்பட்ட டிஜிட்டல் அடையாளங்களின் அளவு எண்ணிக்கை சான்றுறுதிப்படுத்துவதற்காக MIS மொடியூல் மூலம் தொடர்ச்சியாக தொழில்நுட்ப பிரச்சினைகள் எழுந்திருந்தமை போன்ற முறைப்பாடுகள் சரிசெய்ய வேண்டிக் காணப்பட்டது. | கொடுப்பனவுகள் மேற்கொண்டதன் காரணமாக அந்த ஆண்டுக்காக மேலதிகமான நிதியேற்பாட்டை பெறவேண்டி ஏற்பட்டிருந்தது. | |
| (v) | அந்நிய செலாவனி விகிதம் உயர்வடைந்து சென்றமை, வங்கி தரகு மற்றும் சேவைக் கட்டணம் செலுத்தியதன் காரணமாக அச்சிடப்பட்ட ஸ்டிக்கர் மற்றும் டிஜிட்டல் அடையாளங்களுக்காக கிரயம் உயர்வடைந்து சென்றமை அவதானிக்கப்பட்டது. உள்நாட்டு ரீதியில் அச்சிடப்பட்ட ஸ்டிக்கர் மற்றும் டிஜிட்டல் ஸ்டிக்கர்களுக்காக மதுபாண உற்பத்தி கம்பனிகளிலிருந்து ஸ்டிக்கர் ஒன்றிற்காக அறவிடப்படுகின்ற ரூபா 2 வீதம் மேற்கூறப்பட்ட கிரயம் அதிகரித்ததன் அடிப்படையில் நிதி நட்டத்தை மேவுகை செய்வதற்காக கவனம் செலுத்தப்பட்டிருக்க வில்லை. | டொலரின் பெறுமதி விரைவாக உயர்வடைந்து சென்றமையால் நிறுவனத்திற்கு செலுத்துவதற்கு ஏற்படுகின்ற ரூபா 2 இனை விட அதிகரித்ததன் காரணமாக ஸ்டிக்கரின் விலையை திருத்துவதற்காக அரசிறைக் கொள்கைத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | ஸ்டிக்கர் முகாமைத்துவ செயற்திட்டத்தை மீளாய்வு செய்து அரசாங்கத்திற்கு செலவின பொறுப்பு ஒன்று ஏற்படாத வகையில் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (vi) | விற்பனைக்காக விநியோகிக்கப்படுகின்ற போத்தல்களில் போலியான ஸ்டிக்கர் ஒட்டப்பட்ட அனுமதிப்பத்திரம் பெற்ற 78 நிலையங்கள் தொடர்பாக மதுவரி அறிவித்தல் இலக்கம் 7/2021 இன் 25 ஆம் பிரிவு மற்றும் மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 27, 47 மற்றும் 56 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் 03 உற்பத்திக் கூடங்கள் மற்றும் அனுமதிப் பத்திரம் பெற்ற 78 நிலையங்களுக்காக, அந்த 03 உற்பத்திக் கூடங்களினால் பொறுப்புக்கள் கையேற்று 2023 செப்டெம்பர் மாதத்தின் போது சமரசத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. ஆகக் கூடிய சமரசக் கட்டணமாக ரூபா 500,000 வீதம் ரூபா 40.5 மில்லியன் மற்றும் மதுவரித் தொகை மற்றும் 03 சதவீத தாமதக் கட்டணமாக ரூபா 17.938 மில்லியன் விசாரணைக்குட்படுத்தப்பட்ட 03 உற்பத்தி நிறுவனங்களிலிருந்து அறவிடப்பட்டமையும் 180 ml மதுபாணப் போத்தல் 55,940 அரசுடமையாக்கப்பட்டு மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக அறிக்கையிடப்பட்ட போதும் உரிய பரிசோதனை அறிக்கை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | தொடர்ந்தும் விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (vii) | நிதி அமைச்சு மற்றும் மதுவரித் திணைக்களம் ஒன்றினைந்த குழுவினால் 2023 ஒக்டோபர் 16 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட குழு அறிக்கையின் படி டிஜிட்டல் குறியீடு தொடர்ச்சியாக அமுல்படுத்தப்படாமல் உற்பத்தி செயற்பாடுகளின் வேகத்திற்கு டிஜிட்டல் குறியீடு ஈடுபடுத்திய இயந்திரங்களின் வேகத்தை இணங்காதிருந்தமையினால் டிஜிட்டல் குறியீடு அடங்கியிருக்காத உற்பத்திகள் சந்தைக்கு விநியோகத்தல், சகல அறிக்கைகளையும் பெற்றுக்கொள்ளும் மொடியூல் அபிவிருத்தி செய்யப்படாமை, டிஜிட்டல் அச்சிடல் மற்றும் அச்சிடலின் போது ஏற்படும் குறைபாடுகள் டிஜிட்டல் அச்சிடலில் அறிமுகப்படுத்தும் திட்ட முறைமை ஒன்று காணப்படாமை, வெளிப்பகுதியில் தெரிகின்ற வகையில் டிஜிட்டல் குறியீடு அச்சிடப்பட வேண்டியிருந்தமை, முறைமை தொடர்ச்சியாக மேற்பார்வை செய்வதற்காக முழுமையான கணனி மயப்படுத்தப்பட்ட முறைமை ஒன்று தொடர்ந்தும் அபவிருத்தி செய்யப்படுகின்றமை இனங்காணப்பட்டிருந்தது.<br><br>இந்தக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளில் பின்வரும் பரிந்துரைகள் கவனத்தில் கூடிய செயல்முன்னேற்ற அறிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.<br><br>* டிஜிட்டல் குறியீடு மற்றும் அச்சிடப்பட்ட ஸ்டிக்கர்களுக்கான விலை வீச்சை மீண்டும் பகுப்பாய்வு செய்தல் பொருத்தமானது. | உற்பத்தி செயற்பாடுகள் மற்றும் தொடர்புடைய சகல நிலையங்களும் தற்போது மதுவரி உத்தியோகத்தர்களினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றது. ஏனைய தரப்பினர் நேரடியாக பரிசோதனைக்கு உட்படுத்துதல் மற்றும் தொழில்நுட்பக் கணக்காய்வு விரிவுபடுத்துதல் மற்றும் வெளிப்படியாக உள்ள முறையில் திட்ட முறைமைகளை அமுல்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்படுகின்றது.<br><br>மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 33, 34, 35, 48 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் தற்போது அமுல்படுத்தபடுகின்றது. மதுபாண விற்பனைச் சாலைகள் மற்றும் உற்பத்திக்கூடங்கள் தொடர்ச்சியாக சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்படுவதுடன் மேலும் போலியான ஸ்டிக்கர் பரிசோதனைக்காக மதுவரி சுற்றறிக்கை விநியோகித்து அந்த போலியான ஸ்டிக்கர் அடங்கியுள்ள மதுபாண போத்தல்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. சகல உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்காக வும் டிஜிட்டல் குறியீட்டு முறைமையை ஈடுபடுத்தும் போது நடைமுறையில் பிரச்சனைக்கள் | நிதி அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்ட குழு அறிக்கை புரிந்துரையை அமுல்படுத்துதல். |

* மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 56 ஆம் பிரிவின் அகற்றுதல் மற்றும் சமப்படுத்தும் கட்டணங்களை உயர்த்த வேண்டியிருந்தமை.

* 7/2021 மதுவரி அறிவித்தலின் 15 ஆம் பிரிவின் பிரகாரம் பாதுகாப்பு அடையாளங்களின் மாதிரிகள், தன்மை, திறந்த மற்றும் மூடிய மற்றும் தடைவியல் அடையாள மாதிரிகள் மாற்றப்பட வேண்டியிருந்தமை மற்றும் அது தொடர்பாக பொது மக்கள் மற்றும் மதுபாண விற்பனை உரிமையாளர்களுக்கு அறிவிப்பதற்கான திட்டம் ஒன்றை வழங்குதல்.

* பாதுகாப்பான ஸ்டிக்கர் ஒன்றுக்காக உற்பத்தியாளர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 2 விலை தற்போதைக்கு ஈடுகொடுக்கும் வகையில் திருத்துதல்.

* முறையான ஆய்வுடனும் கிரயப் பகுப்பாய்வுடனும் டிஜிட்டல் குறியீட்டு முறைமை யாவும் உள்நாட்டு மதுபான உற்பத்திகளுக்காக ஈடுபடுத்தல் பொருத்தமானது என தோன்றியிருந்தது. எனினும் சகல உள்நாட்டு மதுபாண உற்பத்திக்காகவும் அச்சிடப்பட்ட ஸ்டிக்கர் (Paper Base) ஈடுபடுத்தும் இயலுமை காணப்படுகின்றதா என்பது தொடர்பாகவும் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

## 3.2 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களப் பெறுகைக் குழுவினால் 2022 திசெம்பர் 27 ஆம் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த நிழல்படபிரதி இயந்திரத்தை கொள்வனவு செய்யும் போது தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் 11 நிழல்பட பிரதி இயந்திரங்களை வழங்கும் போது 2 ட்ரே உடன் இயந்திரத்தை வழங்க | நிழல்படபிரதி இயந்திரத்தில் தாள் உள்ளடக்குகின்ற 02 ட்ரே காணப்பட வேண்டியிருந்த போதிலும் வழங்குனர் கமபனி 01 ட்ரே உடன் இயந்திரம் வழங்கியமையினால் திணைக்கத்தால் கோரப்பட்ட 02 ட்ரே இற்குரிய இயந்திரம் வழங்குமாறு வழங்குனர் | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| இணங்கியிருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி ஒரு ட்ரே உடன் இயந்திரம் வழங்கப்பட்டமையால் கேள்விதாரர் மாதிரிகளுக்கு இணங்காமல் பொருள் வழங்கும் போது மாதிரிகளின் பிரகாரம் சரியாக பொருள் கையேற்கப்படாமல் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காகோலை எழுதப்பட்டிருந்தது. மேலும் அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.1 (ஆ) பந்தியின் பிரகாரம் வழங்குனரைத் தெரிவு செய்து உடன்படிக்கையில் கைச்சாத்திடல் மற்றும் நிழல்படபிரதி இயந்திரத்தை கையேற்கும் போது அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.12.3 பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கம்பனிக்கு அறிவித்து அவர்கள் அந்த வழங்கலை மேற்கொண்டமையை உறுதிப்படுத்திய பின்னர் சகல கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பெறுகைகளின் போது சுட்டிக்காணிபிக்கப்பட்ட குறைபாடுகள் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | |

**3.3 நட்டம் மற்றும் இழப்பு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மதுவரித் திணைக்களத்தின் பாதுகாப்பு சேவை மற்றும் பாதுகாப்பு கமரா முறைமை ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் போது மதுவரித் திணைக்களத்தின் கட்டிடத்தில் ஸ்தாபிக்கப்பட்ட மின்பிறப்பாக்கி இயந்திரத்தின் பாகங்கள் 2023 செப்டெம்பர் 04 ஆம் திகதி காணாமல் போனதன் காரணமாக ரூபா 4,130,300 நட்டமொன்று நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டிருந்தது. இது தொடர்பான நிதிப்பிரமணம் 104(3) இன்பிரகாரம் ஆரம்பப் பரிசோதனை அறிக்கை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இச்சம்பவம் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் செயல்முன்னேற்றமும் கணக்காய்வுக்கு அறிக்கையிடப்படவில்லை. | மின்பிறப்பாக்கி இயந்திரம் காணாமல் போனமை, களவாடப்பட்டமை தொடர்பாக பொலிஸ் பரிசோதனை ஒன்று நடாத்தப்பட்டது. மேலும் நிதிப்பிரமாணம் 104(3) இன் பிரகாரம் ஆரம்பப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் திடீர்ப்பரிசோதனைகள் மேற்கொண்டு எதிர்காலத்தில் கணக்காய்விற்கு அறிக்கையிடப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.4 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் காலாண்டிற்கு 9,250 வீதம் குற்ற சுற்றிவளைப்பு இலக்கு 37,000 இனை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் 39,436 சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் குற்ற சுற்றிவளைப்புக்களின் விபரம் வருமாறு. | | |
| (i) மீளாய்வாண்டிற்காக குற்ற சுற்றிவளைப்பு இலக்குகள் 37,000 மற்றும் தொழில்நுட்ப குற்ற சுற்றிவளைப்புக்கள் 4,000 ஆக மொத்த சுற்றிவளைப்புக்கள் 41,000 திட்டமிடப்பட்டு ஆண்டில் குற்ற சுற்றிவளைப்புக்கள் 39,036 மற்றும் தொழில்நுட்ப குற்ற சுற்றிவளைப்புக்கள் 5,499 ஆக மொத்த சுற்றிவளைப்புக்கள் 44,935 அளவில் 2023 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்தது. மதுவரித் திணைக்களத்தின் முன்னுரிமைக் கடமையாக சட்டங்களை அமுல்படுத்தும் பணிகள் தசாப்த காலமாக ஈடுபடுத்தப்பட்ட தொழில்நுட்ப குற்றம் மற்றும் குற்ற சுற்றிவளைப்புக்களின் எண்ணிக்கை இயலுமானவரை 50,000 எல்லையினை அண்மித்த வகையில் வைக்கப்பட்டமை தேவை நிதி அமைச்சினால் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டின் கால எல்லையில் உரிய கணக்காய்வு அவதானிப்புக்களில் காண்பிக்கப்பட்ட தரவுகளுடன் இணங்குகின்றது. | கைத்தொழில் குற்றங்கள் மற்றும் குற்ற சுற்றுவளைப்புக்களின் எண்ணிக்கையை இயலுமானவரை 50,000 எல்லைக்கு அண்மித்ததாக வைத்துக்கொள்ளும் தேவை தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | குற்ற சுற்றிவளைப்புக்கள் இலக்கை பூர்த்தி செய்தல் தொடர்பான செயல்முன்னேற்ற பரிசோதனையின் போது 2023 ஆம் ஆண்டின் போது காணப்பட்ட இலக்குகளை மிஞ்சி சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் 25 மதுவரி நிலையங்களின் குறித்துரைத்த இலக்கை பூர்த்தி செய்யப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அதில் 02 மதுவரி நிலையங்கள் 75 சதவீதத்திற்குக் குறைந்த சதவீதமும் 06 மதுவரி நிலையங்களில் 90 சதவீதத்திற்கு குறைவான சதவீதமும், 17 மதுவரி நிலையங்களில் 90 சதவீதம் முதல் 100 சதவீதத்திற்கு இடையிலான சதவீத இலக்கினை அடைந்து கொள்ளாத நிலைமை அவதானிக்கப்பட்டது. | திருத்தப்பட்ட இலக்கினை அடைந்து கொள்ளாத மதுவரி நிலையங்களுக்காக பதிலளிக்கும் விசாரணை மற்றும் எச்சரிக்கை கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | -மேற்படி- |

## 4 நல்லாளுகை

### 4.1 பொதுமக்களுக்கு சேவையினை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மதுவரி பிரதான அலுவலகத்தில் 1913 குறுகிய குறியீட்டுத் தொலைபேசி ஊடாக மதுவரிச் செயற்பாடுகள் மேடைக்கு பொதுமக்களுக்கு முறைப்பாடுகள் 899 கிடைக்கப்பெற்றிருந்ததுடன் அதில் 317 விசேட செயற்பாட்டு அலகுகளுக்கும் 554 பிரதேச அலுவலகங்களுக்கும் 28 போதைப்பொருள் பிரிவிற்கும் அனுப்பப்பட்டிருந்ததுடன் அதில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான 356 சுற்றி வளைப்புக்கள் அதாவது 39 சதவீதமாகும். | 2024 மார்ச் 31 இல் உள்ளவாறு வெற்றிகரமான 365 சுற்றிவளைப்புக்கள் அதாவது 41 சதவீதம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | செயற்பாட்டு மேடைக்குக் கிடைக்கின்ற முறைப்பாடுகள் தொடர்பாக விரைவாக செயற்படுத்த மற்றும் அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும். |

## 5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தில் சிரேஸ்ட நிலையில் உரிய வெற்றிடங்கள் 38 காணப்பட்டுள்ளதுடன் சிரேஸ்ட நிலைக்குரிய பதவி வெற்றிடங்களுக்காக பதிற்கடமை மற்றும் கடமை மேவுகையின் கீழ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். | சிரேஸ்ட நிலைக்குரிய ஒரு மேலதிக மதுவரி ஆணையாளர் நாயக பதவி, ஒரு பிரதான நிதி உத்தியோகத்தர் பதவி, 02 மதுவரி ஆணையாளர் பதவிகள், 08 பிரதி மதுவரி ஆணையாளர் பதவிகள், 08 உதவி மதுவரி ஆணையாளர் பதவிகள், 18 மதுவரி அத்தியட்சகர்கள் என்பன வெற்றிடமாகக் காணப்பட்டன. எனினும் பிரதான நிதி உத்தியோகத்தர் பதவி 2022.12.31 இல் உள்ளவாறு முற்திகதியிடப்பட்ட 2024.02.01 தினத்தில் வழங்கப்பட்டுள்ளது. | அத்தியாவசிய வெற்றிடப் பதவிகளை நிரப்புவதற்கும் தேவையற்ற பதவிகளை நீக்குவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |